உ
சிவமயம்



# தெல்லிப்பழை, உழுகுடைப்பதித் துர்க்காதேவி ஆலய வரலாறும் திருப்பணி விஞ்ஞாபனமும் பதிகமும்

*

மேற்படி ஆலய தொண்டர் சபையினரால் வெளியிடப்பெற்றது.

இப் புத்தக விற்பனையாற் சேரும் பணம் மேற்படி ஆலயத் திருப்பணிக்கு உபயோகிக்கப்படும்.

1965

உ
சிவமயம்



# தெல்லிப்பழை, உழுகுடைப்பதித்
# துர்க்காதேவி ஆலய வரலாறும்
# திருப்பணி விஞ்ஞாபனமும்
# பதிகமும்

மேற்படி ஆலய தொண்டர் சபையினரால்
வெளியிடப்பெற்றது.

இப் புத்தக விற்பனையாற் சேரும் பணம்
மேற்படி ஆலயத் திருப்பணிக்கு உபயோகிக்கப்படும்.

1965

குகன் அச்சகம்,
தெல்லிப்பழை

உ
சிவமயம்

தெல்லிப்பழை, உழுகுடைப்பதித்

# துர்க்காதேவி ஆலய வரலாறும் திருப்பணி விஞ்ஞாபனமும்

---

## சிவமுஞ் சக்தியும் :

எல்லாம் வல்ல பரம்பொருளாயுள்ளது சிவம். அதனுடைய பேராற்றல் எல்லாவகையிலும் எங்கும் பரந்துள்ளது. அந்த ஆற்றல் முழுவதுந் தன் வடிவாகக் கொண்டு திகழ்வது பராசக்தி. எனினும், அது சிவத்திலிருந்து வேருகவுள்ளதன்று. அதிலிருந்து பிரிக்கமுடியாத ஒருவகையிலேயே அச் சக்தி அமைந்துள்ளது. அதனுல் அதனைத் 'தாதான்மிய சக்தி' என்றும் அழைப்பார்கள்.

சிவம் என்றுஞ் சச்சிதானந்த மயமாயிருப்பது. அதனிடத்திலே விளங்கும் பராசக்தி பெருங்கருணை மயமாக இருப்பது. கரை காணமுடியாத பெருங் கடல்போல அக் கருணை ததும்பிக்கொண்டிருப்பதை ஆகமங்கள் காண்கின்றன ; உபநிடதங்கள் காண்கின்றன ; ஆராமையோடு போற்றுகின்றன.

உலகமான உலகமொன்று நம் கண்முன் காணப்படுகின்றது. இதில் வாழ்வான வாழ்வொன்று நமக்கு வாய்த்திருக்கின்றது. இதற்குரிய பேறன பேருென்று நமக்கு வரவிருக்கின்றது. இவையெல்லாம் அந்தப் பராசக்தியினுல் வருகின்ற ஆக்கங்களே. இது அநுபவ உண்மை.

ஆகாயம் பரந்துபட்ட ஒரு பெருவெளி. அதனிடத்தில் நீரணுக்கள் நிறையவுண்டு. ஒரு அணுவையாதல் நாம்

கண்டதில்லை. அந்த அணுக்கள் ஒன்றுதிரண்டு மேகமாகின்றன. அப்பொழுதுதான் அவற்றை நாம் காண்கின்றோம். அவை மழையாய்ப் பொழிகின்றன. அப்பொழுதுதான் நாம் அவற்றின் பயனை உணர்கின்றோம்.

சிவம் நம் காட்சிக்கு அப்பாற்பட்டது. அதன் கருணையும் நம் காட்சிக்கு அப்பாற்பட்டது. இது, ஆகாயமும் நீரணுக்களும் இருக்கும் நிலைபோல என்று வைத்துக்கொள்வோம். அக்கருணை தன் சங்கற்பத்தினால் ஒவ்வொரு மூர்த்தத்தை மேற்கொள்கின்றது. அம் மூர்த்தத்தை ஞானிகள் தமது ஞானக் கண்ணாற் காண்கின்றார்கள். தாம் கண்ட மூர்த்தத்தை மற்றவர்கள் உருவங்களாக அமைத்துக் கொள்ளத்தக்க வகையிற் சொல்லியும் வைத்திருக்கின்றார்கள். அவர்களினுதவியால் அக் கருணையின் வடிவத்தை இப்பொழுது நாம் காணக்கூடியவர்களாயிருக்கின்றோம். நீரணு மேகவடிவாய்க் காணப்படுகிறதுபோல இருக்கின்றது இது. அவ் வடிவத்தின்மூலம் நமக்கு அக்கருணை உணரப்படுகின்றது; பயன்படுகின்றது. மேகத்தின்மூலம மழை பயன்பட்டதுபோல இருக்கின்றது இது.

நீரணுக்கள் முகிலாய்த் திரண்டு மழையாய்ப் பொழிந்து நம்மை வாழ்விக்கின்றன. இறைவனது சக்தி தானுய் உருவெடுத்துக் கருணை வழங்கி நம்மை வாழ்விக்கின்றது. இந்த இரண்டிற்கும் நேரடியான ஒரு பொருத்தம் இருப்பதைக் காண்கின்றோம். இந்த இரண்டில் ஒன்றை முற்கொண்டு பார்க்கும்போது மற்றதனயதன் இயல்பு புலனுகின்ற அழகையும் அவதானிக்கின்றோம். இனி நாங்கள், நன்றாய் மழை பொழிதலை உவமிக்கில் சக்தி கருணை பொழிவதுபோல என்று உவமிக்கலாம். சக்தி நன்றாய்க் கருணைபொழிதலை உவமிக்கில் மேகம் மழைபொழிவதுபோல என்று உவமிக்கலாம்.

மாணிக்கவாசகசுவாமிகள், உலகில் நிரம்ப மழைபொழிய வேண்டுமென்று வேண்டுதல் செய்கின்றார். அப் பொழிதல் சக்தி கருணை பொழிதல்போல இருக்கட்டும் என்று உவமிக்கின்றார். இச் சிறப்பைத் திருவெம்பாவைப் பாடலொன்றிலே

காண்கின்றோம். ''முன்னிக் கடலைச் சுருக்கி.........'' என்று தொடங்குகின்றது அப்பாடல். பெரும்பாலும் எல்லோரும் எப்போதுங் கேட்கின்ற ஒரு பாடல் அது.

மேகம் மழை பொழிவது வெளிப்படையாக உலக வாழ்வுக்கு உபகாரமான ஒரு நிகழ்ச்சி; அது இலௌகிகம்.

சக்தி கருணை பொழிதல் அந்தரங்கமான ஆன்மலாபஞ் சம்பந்தமான ஒரு நிகழ்ச்சி; அது ஆத்மீகம் என்பர் சிலர்.

நம்முடைய சமய உண்மைப்படிக்கு அப்படியொரு பாரதூரமான வேறுபாட்டிற்கிடமில்லை. மழை பொழிதல் எவ்வளவுக்கெவ்வளவு இலௌகிகமாகுமோ அவ்வளவுக்கவ்வளவு அது ஆத்மீகத்துக்கும் உதவுவதாகும். சக்தி கருணை பொழிதல் எவ்வளவுக்கெவ்வளவு ஆத்மீகமாகுமோ அவ்வளவுக்கவ்வளவு அது இலௌகிகத்துக்கும் உதவுவதாகும். ஆனால், இரண்டிற்குமுரிய வேறுபாடு இன்னொரு கோணத்திலே மிளிர்கின்றது. சக்தியின் கருணைப் பொழிவே மழை பொழிதற்குங் காரணமாகும். மழை பொழிதல் சக்தியின் கருணைபொழிதற்குக் காரணமாகவேண்டியதில்லை. ஆகவே, குறித்த இரண்டினுள்ளுந் தனி முதன்மை பெற்றுள்ளது சக்தியின் கருணையேயாதல் புலனாகின்றது.

சிவத்தின் சக்தியாகிய பராசக்தி எப்படியிருக்கும்? அதன் உபகாரம் எப்படியிருக்கும்? அதற்குரிய தனி முதன்மை என்ன? என்பவற்றை ஒருவாறு விளங்கிக்கொள்ளுதற்கு இதுவரையும் தெண்டித்தோம்.

## சக்தியின் மூர்த்தங்கள் :

இங்ஙனம் விளங்குகின்ற அப் பராசக்தியானது உலகை நோக்கியும் உயிர்களை நோக்கியும் பலவிதமான தன்னாற்றல்களினாற் பலவிதமான தொழில்களை நிகழ்த்துவதாய் மிளிர்ந்துகொண்டிருக்கின்றது. அதுபற்றி ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு மூர்த்தமாக அது திகழ்கின்றது. அதனால் அதற்கு மூர்த்தங்கள் பலவாகின்றன. அதற்குரிய எல்லா மூர்த்தங்களையும் பொதுவில் முக்கியமான மூன்று மூர்த்தங்களில் அமைத்து வழிபடுவது மரபு.

பராசக்தி தான் சாந்தவடிவாயிருந்து உயிர்களுக்கு ஞானத்தை வழங்கும் நிலையில் அது சரஸ்வதி மூர்த்தம்; தான் ஐஸ்வரிய வடிவாயிருந்து செல்வத்தை வழங்கும் நிலையில் இலக்ஷ்மி மூர்த்தம்; தான் வீரியத்தின் வடிவாயிருந்து வீரத்தை வழங்கும் நிலையில் துர்க்கா மூர்த்தம் எனப்படும். எல்லாம் அருள் மூர்த்தங்களேயாதல் வெளிப்படை.

குடும்பஞ் சம்பந்தமான எல்லா விஷயங்களுக்குந் தானே முழுப் பொறுப்பாளியாயிருக்குந் தந்தையைப்போலச் சிவம் இருந்துகொண்டிருப்ப, குடும்பத்திலுள்ள எல்லோர் விஷயத்திலும் விசேடமான ஒரு அக்கறையும், பரிவும், பரபரப்புங் கொண்டிருக்குந் தாய்போல இச் சக்தி அமைந்திருப்பதால் இதனைத் தேவியென்றும், தாயென்றும் அன்பொழுக அழைப்பதே உசிதமாகும்.

## துர்க்கா மூர்த்தம்:

தேவிக்குரிய பல்வேறு மூர்த்தங்களில் துர்க்கா மூர்த்தம் மிக உன்னதமானது; சர்வ ஆற்றலுந் தன்பாற் கொண்டுள்ளது; 'துர்க்கா' என்ற மந்திரமே தன் ஓசையாலும் பொருளாலும் மேன்மைபெற்று விளங்குவது. இதன் ஓசை மிக மிக உரம்வாய்ந்த ஓர் ஓசையாகும். 'அடைதற்கரியவள்' என்பது இம் மந்திரத்தின் பொருள். அழித்தற் சக்தி முழுவதும் இம் மூர்த்தத்திலேயே அமைந்துள்ளது. நம் சமய வரலாற்றின்படி துஷ்டர்களாய் விளங்கிய அனைவரும் துர்க்காதேவியால் அழிக்கப்பெற்றுள்ளார்கள். 'துர்க்கன்' என்ற பெயருள்ள அசுரன் ஒருவன் இத் தேவியால் அழிக்கப் பெற்றுள்ளான். அந்நிகழ்ச்சி 'துர்க்கா' என்ற பெயரைப் பிரபல்யப்படுத்திக்கொண்டிருக்கின்றது. அன்றியும் 'மகிஷாசுரன்' என்ற அசுரன் ஒருவனும் இத் தேவியால் அழிக்கப்பெற்றுள்ளான். 'மகிஷாசுரமர்த்தனி' என்ற பெயர் அதனாலேயே தேவிக்கு ஏற்படுவதாயிற்று. வருடாவருடம் நடைபெற்றுவரும் 'மானம்பு' நிகழ்ச்சி இன்றும் அதனைப் பிரபல்யப்படுத்தி வருகின்றது.

ஆற்றல் என்ற ஆற்றல்களுளெல்லாம் அழிக்கும் ஆற்றலே பேராற்றல் எனப்படும். ஆக்கும் ஆற்றல், காக்கும் ஆற்றல் எல்லாம் அவ்வாற்றல் வாய்ந்தவர்க்குமட்டுமே

உண்டு. அழித்தல் என்பது சங்காரம் என்றுஞ் சொல்லப் படும். சர்வ சங்கார காரணனாய்த் திகழ்பவர் சிவபெருமான். அவரிடத்திருந்துகொண்டு சர்வா சங்கார காரணியாய்த் திகழும் பராசக்தியே துர்க்காதேவியாவாள். சர்வ ஆற்றலுக் கும், சர்வ கருணைக்கும் அவளே இருப்பிடமாவாள்.

"தாயே! துர்க்காதேவி! நீயே கருணைக்கடல். ஆனால் நான் ஆபத்தில் அழும்போதுதான் உன்னை நினைக்கின்றேன். இதை நான் வஞ்சகமாகச் செய்யவில்லை. பசி தாகத்தினால் உணவும் நீருந் தேவைப்படும்போதுதானே சிறுபிள்ளைகள் தங்கள் தாயை நினைக்கின்றனர்." — தேவி தோத்திரம்

இவ்வளவு பரிவாக ஓர் அன்பர் தேவியிடத்தில் முறை யிட்டுக்கொள்கின்றார். இப்படியே நாமும் பரிந்து வேண்டி னால் இரங்கக்கூடியவள் துர்க்காதேவி. இரங்கவேண்டிய வளும் அவளே.

## துர்க்கை கோயிலின் அருமையும் பெருமையும்:

இன்று நமது ஈழநாட்டில் சிறியனவும் பெரியனவுமாக ஏறக்குறைய இரண்டாயிரஞ் சைவாலயங்கள் உள்ளன. ஒவ்வொரு தெய்வத்தின் பெயரிலும் பல்வேறு ஆலயங்கள் இவற்றுட் காணப்படுகின்றன. இவ்வளவிற்குள்ளும் துர்க்கா தேவிக்கு ஒரே ஓர் ஆலயம் மட்டுமே இவ்விலங்கையில் உண் டென்பது வியப்பிற்குரியதாகும். அதுவும் நம் வாழ்பதியா கிய யாழ்ப்பாணக் குடாநாட்டிலே அமைந்திருத்தல் நம்ம வர்க்குப் பெருமையும் பெருமகிழ்வும் விளைப்பதாகும். யாழ்ப் பாணத்திலும் மூர்த்தி தல தீர்த்த விசேடம் வாய்ந்த வலிகா மம் வடக்கிலே, வலிகாமம் வடக்கிலும் புராதன சரித்திரப் பெருமை வாய்ந்த தெல்லிப்பழையிலே, தெல்லிப்பழையிலும் காங்கேசன்துறை யாழ்ப்பாணப் பெருந்தெருவின் ஓரத் திலே, அங்கும் போதிய இடவிலாசப் பரப்புள்ளதாகிய உழுதுடைப் பதியிலே அக்கோயில் அமைந்துவிட்ட வாய்ப்பு எண்ணியெண்ணி இன்புறத்தக்கதாகும். அன்றியும், புரா தனப் பெருமை வாய்ந்த மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயி லென்ற பெருந் தலத்தோடு இத்தலம் பண்டுதொட்டே

மானம்புத் தொடர்பு கொண்டிருக்குந் தன்மையும், அத்தலம் வெண்கல் திருப்பணி முடிந்து 1815ஆம் ஆண்டில் கும்பாபிஷேகமாக, இத்தலம் அவ்வாறே திருப்பணிமுடிந்து அடுத்த ஐந்தாவது ஆண்டில், 1820இல் கும்பாபிஷேகமாய செய்தியும் குறிப்பிடத்தக்கன. குறித்த மானமபுத் தொடர்பு 1829ஆம் ஆண்டில் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டுவருகின்றது. இக்கோயிலின் பழைமையை ஓரளவில் உணர்ந்து கொள்வதற்கு இது வாய்ப்பாகின்றது.

அக்காலப் பொருளாதார நிலையில் ஒரு கோயில் உற்பத்தியாகி அது முறையாகக் கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகமுமாகும் நிலையடைவதற்கிடையிற் குறைந்தது நூறு வருஷமாவது கழிந்திருக்கவேண்டும் என்று கருதுவது பிழையாகாது. ஆகவே, இக் கோயிலின் ஆரம்பம் எப்படியும் இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பது அறிஞர் அபிப்பிராயமாகும்.

## நம் ஆலயத்தின் பூர்வ வரலாறு:

பொதுவாக இலங்கையிலுள்ள சைவக் கோயில்களெல்லாம் முற்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே தடையின்றி நடைபெற்ற பிரயாணத் தொடர்பின் மூலமாகவே விருத்தியடைந்துள்ளன என்பது பிரசித்தம். கடல் யாத்திரை மூலமாகக் காலாகாலங்களில் தங்குதடையின்றி இங்குள்ளார் தல யாத்திரைக்காக அங்கு செல்வதும், சிறந்த சிறந்த தெய்வ மூர்த்தங்களை அங்கு பெற்று இங்கு கொண்டுவருவதும், சிறந்த ஆசாரியர்களை அங்கிருந்து அழைத்து வருவதும், ஆன்ம விசாரமுற்ற சிலர் இங்கிருந்து அங்குசென்று தங்கிவிடுவதும், அத்தகைய ஞானிகள் சிலர் அங்கிருந்து இங்குவந்து தங்குவதும் அக்காலத்திற் சர்வ சாதாரணமான நிகழ்ச்சிகளாயிருந்துவந்துள்ளன. இவ்வகையில் ஏற்பட்ட இரண்டொரு நிகழ்ச்சிகளே இத் திருக்கோயிலின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏதுவாயிருந்திருக்கின்றன.

ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்குமுன் தெல்லிப்பழையிற் கதிர்காமர் என்ற சைவ வேளாளர் ஒருவர் வசித்து

வந்தார். அவர் தலயாத்திரை புரிவதிற் பக்தியும் சிரத்தையும் மிக்கவர். ஏறக்குறைய 1750 ஆம் ஆண்டளவில் அவர் தலயாத்திரைக்காகப் புறப்பட்டுக் காங்கேசன்துறையில் தோணியேறித் தென்னிந்தியாவின் கிழைக்கரையிலுள்ள வேதாரணியத்திலே கரையேறினர். அவர் அங்கிருந்து பாதயாத்திரையாகத் தல வழிபாடு செய்துகொண்டு காசிவரை சென்றார். இவ்வகையில் இந்தியாவில் ஏறக்குறையப் பத்து வருடங்கள் கழிந்தன. இக்காலவெல்லைக்குள் அவர் தமிழும் சமஸ்கிருதமும் நன்கு கற்றுத் தேறி ஒரு துர்க்காதேவி உபாசகராகவும் மாறிவிட்டார். அதனால் ஏறக்குறைய 1760 ஆம் ஆண்டளவில் தாம் யாழ்ப்பாணம் திருப்பும் போது துர்க்காதேவி இயந்திரமொன்றும், வெண்கலத் திலைமைந்த 'திருமுகக் கெண்டி' உருவமொன்றுங் கையோடு கொண்டுவந்தார். குறித்த அன்பர் கதிர்காமர் என்பவர் காசியிற் பலநாள் தங்கியிருந்திருப்பார். இந்தியா முழுவதிலுமுள்ள சக்தி பீடங்கள் அறுபத்துநான்கினுள்ளும் காசியிலுளள சொப்பனேஸ்வரி பீடம் முக்கியமானது. துர்க்காதேவி சகல கலைகளுடனும் பொலிந்திருக்கும் பீடம் அது. அன்பர் கதிர்காமர் குறித்த இயந்திரத்தை அங்கிருந்தே பெற்றிருப்பார் என எண்ணுதற்கு இடமுண்டு. இங்ஙனம் அவர் தாம் கொண்டுவந்த இயந்திரத்தையும் திருமுகக்கெண்டியையும் உழுதுடைப்பதியில் ஒரு மரத்தடியிற் கொட்டிலமைத்து அதில் தாபனஞ்செய்து பூசித்துவந்தார்.

உழுதுடைப்பதித் துர்க்காதேவி ஆலயத்தின் ஆரம்பத்தையொட்டி வழங்கிவருங் கர்ணபரம்பரைச் செய்திகளில் முக்கியமான செய்தி இதுவாகும். குறித்த நிகழ்ச்சியிற் சம்பந்தப்பட்டவர் கதிர்காமரன்று, சுப்பரென்னும் வேளாளர் என்பாருமுண்டு.

இவ்வகையில் " கதிர்காமர் அவர்களோ சுப்பர் அவர்களோ ஆன்மார்த்தமாகப் பூசித்துவந்த இத்தலம் அவர் காலத்தின்பின் தன் வளர்ச்சியில் ஒரு திருப்பமுற்ற செய்தியை இனிக் காண்போம்.

அக்காலத்தில் காஞ்சிபுரத்திலிருந்த அந்தணப் பெரியாரொருவர், யாத்திரை நோக்கமாகவோ தேவியின் பிரத்தியேகமான அழைப்பின் பேரிலேயோ அறியோம், தோணி மூலம் காங்கேசன் துறைக்கு வந்துசேர்ந்தார். அவர் அங்கிருந்து தெல்லிப்பழையை அடைந்து களைத்துத் தவித்துப் பசி வேதனையும் வருத்தக் குறித்த உழுகுடைப்பதியில் ஒரு மரத்தடியில் வந்திருந்து அயர்ந்து உறங்குவாராயினர். அக்காலத்திற் செல்வமுஞ் செல்வாக்கு முள்ளவர்களாயிருந்த அப்பகுதிப் பெரியார்களில் நாகநாத உடையாரும் ஒருவர். குறித்த தினத்தன்று இரவிலே தேவி — சொப்பனேஸ்வரி பீடத்திலிருந்து வந்த அத்தேவி—உடையாருக்குச் சொப்பனத்திலே தோன்றி, தன்னையும், அவ்விடத்தில் வந்து அநாதரவாயிருக்கும் காஞ்சிப்பதி அந்தணரையும் ஆதரிக்குமாறு உணர்த்தியருளினர். அவ்வருள்வழி நின்று, உடையார், ஆலயத்தையும் அந்தணரையும் ஆதரிக்க முற்பட்டார். தேவியின் கருணைக்குப் பாத்திரமாயிருந்தவரும், தேவியால் தமக்கு அறிமுகஞ் செய்துவைக்கப்பட்டவருமாகிய அவ்வந்தணரையே ஆலய அர்ச்சகராக நியமித்து வைத்தார். அந்த அந்தணருடைய சந்ததியினரே இன்றும் இக்கோயிலின் அர்ச்சகர்களாக இருந்துவருதல் குறிப்பிடத்தக்கதாகும்.

கதிர்காமரின் ஆன்மார்த்த பூசை நிலையமாயிருந்த அந்த ஆலயம் பரார்த்த பூசைக்குமுரிய நிலையமாய் விருத்தியடைந்தவாற்றை மேற்கூறிய செய்தி உணர்த்துகின்றது.

அதன்மேல், ஆலயப் பொறுப்பாளராயிருந்த உடையாரிடத்திலும், அர்ச்சகராயிருந்த அந்தணரிடத்திலும் நிலைத்து நின்று விளங்கிய தேவியின் அருட்பிரபாவம் அப்பகுதியிலுள்ளார் அனைவரையும் வசீகரித்து வருவதாயிற்று. அதன் காரணமாக நாளடைவிற் பொருளும் பொன்னும் பெருகி ஆலயத் திருப்பணியுஞ் செவ்வனே நடைபெற்று வந்துகொண்டிருப்பதாயிற்று. அவ்வகையிலேயே முன் குறிப்பிட்டவாறு 1820ஆம் ஆண்டிற் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்குரிய நிலை உருவாயிற்று எனக் கொள்ளுதல் பொருந்தும்.

குறித்த நாகநாத உடையாரின் முயற்சியால் எழுப்பப் பட்ட திருக்கோயில் அக்கால ஆட்சியாளராகிய டச்சுக்கார ரால் ஒருதடவை சிதைவுற்று மீளத் திருப்பணி நடைபெற் றுத்தான் குறித்த ஆண்டிற் கும்பாபிஷேகமாயிருக்கவேண் டும் என்ற அபிப்பிராயமும் அன்பர்கள் சிலரிடையே நிலவி வருகின்றது. இது இன்னுந் திர விசாரித்தறியவேண்டிய விஷயம். இதனை ஒருமுகப்பட்ட உண்மையாகத் துணிந்து கூறுதற்கு இப்போது போதிய அத்தாட்சிகள் இல்லை. அந்த வகையில் யாரேனும் முயன்று அத்தாட்சிகளைப் பெற்று ஆராயக்கூடுமாயின் அது விரும்பத்தக்கதாகும். கோயிலைப் பற்றிய ஆர்வத்தை மேலும் பெருக்குதற்கு அது நல்ல ஒரு தூண்டுதலுமாகும்.

## நவராத்திரி பூசை :

சக்தியின் முக்கியமான மூர்த்தங்கள் மூன்று என மேலே கண்டோம். அவை சரஸ்வதி, இலக்ஷ்மி, துர்க்கை என்பன. இந்த மூன்று மூர்த்த நிலைகளிலும் வைத்துத் தொடர்பாகச் சக்தியை உபாசனை செய்தற்கு உகந்த காலம் புரட்டாசி மாசமாகும். புதுமழை பெற்றுப் பூமி குளிர்ந்திருக்குங்காலம் அக்காலம். புதுமழைப் பொழிவுள்ள அக்காலமே சக்தியின் கருணைப் பொழிவினை ஞாபகப்படுத்துதற்கு ஏற்ற கால மென்பது ஒன்று. பயிர் பச்சைகள் எங்கும் எல்லாஞ் செழித்துச் செடி கொடிகள் எங்கும் எல்லாம் மலர்ந்து இயற்கை தன் பூரண வனப்போடு பொலிதற்குரிய அக் காலம் சக்தியின் சாந்நித்தியத்தை வெளிப்படத் தோற்றிக் கொண்டிருக்கும் என்பது ஒன்று. இத்தன்மைகளினால் அக் காலம் சக்தியுபாசனைக்குத் தகுந்த காலமாகப் பெரியோராற் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

அன்றியும், புரட்டாசி மாசம் தக்ஷிணாயன காலப்பகுதியி ல்டங்குகின்றது. அக்காலம் தேவர்களுக்கு இரவுவேளை என்னப்படும். தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் பகைவர்க ளாகிய அசுரர்கள் அவ்விரவில் மிகுதியாகச் சஞ்சரிப்பார்கள். அவர்களால் யாவர்க்கும் பெருங் கொடுந் துன்பங்கள் நிகழும்

இவை நிகழாவண்ணம் அவ்வசுரர்குலத்தை அழித்தொழிக்க வேண்டுவது சக்தியின் கருணைமயமான ஒரு கடமையாகும்.

தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் புறத்திலும் அசுர பகையுண்டு; அகத்திலும் அசுரபகையுண்டு. படைப்பினுல் தேவர்களாயும் படைப்பினுல் மனிதர்களாயும் உள்ளவர்களுக்குப் படைப்பினுல் அசுரர்களாயுள்ளவர்கள் பகையாயிருக்கின்றார்கள். இது புறப்பகை. பிறப்பினுல் தேவ உயிராயும் பிறப்பினுல் மனித உயிராயும் உள்ள உயிர்களுக்கு அவற்றையறியாமல் அவற்ருேடு சேர்ந்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களாகிய அசுரர்கள் பகையாயிருக்கின்றார்கள். இது உட்பகை. புறப்பகை தோற்றும் பகை; உட்பகை தோன்ருப் பகை. இப் பகைகளினுல் இலௌகிகமும் பாழாகும்; ஆத்மீகமும் பாழாகும். இப் பாழ்படும் நிலையிலிருந்து நீக்கிப் பயன்படும் நிலைக்கு உயர்த்தித் தேவர்களையும் மனிதர்களையும் காப்பது சக்தியின் தனிப் பெரும் பொறுப்பாயுள்ளது. கருணைமயமான ஒரு பொறுப்பு அது.

இக் கருணையினுலே பராசக்தி சர்வஞ்ஞனுகிய சிவபெருமானை நோக்கி அவ்வசுரர்களை அழிப்பதற்குரிய அதிகாரத்தைத் தனக்கு அருளுமாறு வேண்டுதல் புரிகின்ருள். அதனைக் குறைவறப் பெறுதற்காகத் தனக்கேயுரிய ஒரு முறையிற் பராசக்தி தவம் புரிகின்ருள். இத் தவம் புரட்டாசி மாச அமாவாசைக்குப் பின் வரும் ஒன்பது தினங்களில் நடைபெறுகின்றது. தபஸின் பலனுகிய அசுர சம்மாரம் பத்தாவது நாள் நடைபெறுகின்றது. அசுரரை வெல்லும் தினமாதலால் அத்தினம் 'விஜய தசமி' என்று பெயர்பெறுகின்றது. குறித்த தவம் நிகழும் ஒன்பது தினங்களிலும் இராத்திரி காலங்கள் விசேடம் வாய்ந்தவை. ஆதலினுல் இக் காலப்பகுதி 'நவராத்திரி' எனப் பெயர்பெறுகின்றது.

உயிரின் வாழ்க்கை வரலாற்றிலே இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று பந்த நிலை; மற்றையது மோக்ஷ நிலை.

உயிர் ஆணவத்தின் மதர்ப்பினாலே வினைகளைச் செய்து வினைகளை அநுபவித்துக்கொண்டிருக்கும். இம்மையும் மறுமையும் அதன் பந்தநிலை. இவற்றிலிருந்து விடுபட்டு அது தன்னையும் சிவனையும் அறியும்நிலை அதன் மோக்ஷநிலை. பந்தநிலையில் அதற்கு அறிவு, செல்வம், வீரம் என்னும் மூன்றும் இன்றியமையாதவை. மோக்ஷநிலையில் அதற்கு ஞானம், ஐஸ்வரியம், வைராக்கியம் என்னும் மூன்றும் இன்றியமையாதவை. சொல்லளவில் அறிவுக்கு இனமானது ஞானம். ஆனால், அறிவென்பது பந்தநிலையில் மிகச் சுருங்கிய நிலையில் உலக வாழ்க்கைக்கு ஏற்ற அளவில் உயிருணர்வில் ஏற்படும் ஒரு சிறு விளக்கமாகும். ஞானமென்பது மோக்ஷநிலையில், மிகப் பரந்தநிலையில், தன்னையும் சிவனையும் உணர்தற்கு ஏற்ற அளவில் உயிருணர்வில் ஏற்படும் பெருவிளக்கமாகும். சொல்லளவில் செல்வத்துக்கு இனமானது ஐஸ்வரியம். ஆனால், செல்வமென்பது பந்தநிலையில் உலக வாழ்வுக்கு உபகாரமாதற்கேற்ற முறையில், தேவைப்படும் பொன், நிலம் முதலிய அநித்தியப் பொருள்களைப் பெற்றிருத்தலால் ஏற்படும் ஒரு சிறு திருப்தி. ஐஸ்வரியமென்பது, மோக்ஷநிலையில் தன்னையுஞ் சிவனையும் அநுபவிப்பதற்குத் தடையாக இருக்கக்கூடிய இந்த அநித்தியப் பொருள்கள் ஒன்றிலும் பற்றில்லாமலே ஒரு குறைவுமின்றியிருக்கும் பூரண நிறைவு. அந்நிறைவு செல்வத்துட் செல்வம் ஆவது. 'செல்வன் கழலேத்துஞ் செல்வம்' என்று திருஞானசம்பந்தப்பிள்ளையார் குறிப்பிடுஞ் செல்வம், இந்த ஐஸ்வரியமேயாகும்.

இனி, விராகமென்பது பற்றின்மை. விராகத்தினால் விளைவது வீரம். சொல்லளவில் விராகத்துக்கு இனமானது வைராக்கியம். ஆனால், வீரமென்பது பந்தநிலையில் சாதாரண வாழ்வில் ஏற்படுஞ் சிறுச்சிறு இடையூறுகளை மேற்கொள்ளும் வகையில் உயிரிடத்தில் ஏற்படும் சிறிய ஓர் ஆற்றலுணர்ச்சி. வைராக்கியமென்பது மோக்ஷ நிலையில் உயிர் தன்னையுஞ் சிவனையும் அநுபவிக்கும் பொழுதில் அதற்கொரு சோதனையாக மேல்மேல் வரக்கூடிய எவற்றிலுந் தான் அசைந்து கொடுக்காமல் இருக்கும் ஒரு ஸ்திர நிலை.

'வானந் துளங்கிலென் மண்கம்பமாகிலென்', 'அஞ்சுவ தியாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை' என்று அப்பர் சுவாமிகள் இருந்த நிலை, இந்த வைராக்கிய நிலையேயாம். இங்ஙனம், அறிவு, செல்வம், வீரம் என்பன பந்தநிலைப் பண்புகள்; ஞானம், ஐஸ்வரியம், வைராக்கியம் என்பன மோக்ஷநிலைப் பண்புகள் என்பதையும், இவை சொல்லளவில் ஒரு சிறு ஒற்றுமையுடையனவாயிருப்பினும் தன்மையளவிற் பெரும்பெரும் வேற்றுமை யுடையனவாயிருத்தலையும் நாம் நன்குணர்தல் வேண்டும்.

பந்தநிலைக்கு வேண்டிய அம்மூன்று பண்புகளாயினுஞ் சரி, மோக்ஷநிலைக்கு வேண்டிய அம் மூன்று பண்புகளாயினுஞ் சரி எல்லாம் பராசக்தியினாலேயே உயிருக்கு வழங்கப் படுகின்றன.

அவற்றுள் அறிவு — ஞானம் வழங்கும் நிலையில் பராசக்தி சரஸ்வதி மூர்த்தமாய் விளங்குகின்றது. செல்வம் — ஐஸ்வரியம் வழங்கும் நிலையில் அது இலக்ஷ்மி மூர்த்தமாகின்றது. வீரம் — வைராக்கியம் வழங்கும் நிலையில் அது துர்க்கா மூர்த்தமாகத் திகழ்கின்றது. இவ்வியல்பிற்கேற்பக் குறித்த ஒன்பது இரவுகளில் முதல் மூன்றிரவுகளும் துர்க்கை வழிபாட்டிற்குரியனவாகும், அடுத்த மூன்று இரவுகளும் இலக்ஷ்மி வழிபாட்டிற்குரியனவாகவும், அடுத்த மூன்று இரவுகளும் சரஸ்வதி வழிபாட்டிற்குரியனவாகவும் பண்டைக்காலந் தொட்டுப் பயின்று வரப்படுகின்றன.

இந்த நவராத்திரி காலத்தில் நிகழும் வழிபாட்டின் போது இயந்திரபூசை, ஓமம், செபம், தியானம் என்பன வழக்கமாக நிகழும். இவற்றுடன் முக்கியமாக நிகழவேண்டியது அர்ப்பணம். பராசக்தியைச் சரஸ்வதியாக வழிபடும்போது வழிபடுபவர் தமக்குரிய அறிவையோ ஞானத்தையோ தேவியிடம் அர்ப்பணித்து வழிபடவேண்டும். அர்ச்சிக்கும் மலர்களில் ஞானமலரும் ஒன்று. அங்ஙனம் வழிபட்டால் தான் வழிபடுபவர் மேலான அறிவையோ மேலான ஞானத்தையோ பெறமுடியும். தேவியை இலக்ஷ்மியாக வழிபடும்

போது தமக்குரிய செல்வத்தையோ ஐஸ்வரியத்தையோ பெறுவதற்கு அதுவே உபாயமாகும். தேவியைத் துர்க்கை யாக வழிபடும்போது தமக்குரிய வீரத்தையோ வைராக்கி யத்தையோ அர்ப்பணித்து வழிபடுதல் வேண்டும். மேலான வீரத்தையோ மேலான வைராக்கியத்தையோ பெறுவதற்கு அதுவே வழியாகும். நவராத்திரி பூசையின்போது ஏடுகள், புத்தகங்கள், பொன், மணி முதலியவைகள்; ஆயுதங்கள் படைக்கலங்கள் எல்லாம் பூசையில் வைக்கப்படுவதன் அர்த்தம் இதுவேயாகும். இவற்றைப் பூசையில் வைப்பதன் நோக்கமாகிய அர்ப்பண புத்தி எவ்வளவுக்கு அதிகமாகுமோ அவ்வளவுக்கு நவராத்திரி வழிபாடு சிறக்கும்.

அறிவு, செல்வம், வீரம் இல்லாமல் இம்மை வாழ்வு மில்லை; மறுமை வாழ்வுமில்லை. ஞானம், ஐஸ்வரியம், வைராக்கியமில்லாமல் மோக்ஷவாழ்வில்லை. எனவே, இம்மை, மறுமை, அம்மை (மோக்ஷம்) என்னும் மூன்றற்கும் இன்றி யமையாது உதவுவது நவராத்திரி வழிபாடு. பெத்தர்களுக் கும் முத்தர்களுக்கும் உரியது நவராத்திரி வழிபாடு. இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் உரியது நவராத்திரி வழிபாடு. தலைவி தலைவனை வழிபடும் தனியான ஓர் உயர்ந்த பண்பாட்டை மக்களிடையே அமைத்து வைப்பது நவராத் திரி வழிபாடு. அரசன் முதலாக ஆண்டியீறுக எல்லோருக்கும் அர்ப்பண வாழ்வைப் பயிற்றுவது நவராத்திரி வழிபாடு. இவையெல்லாம் நவராத்திரி வழிபாட்டின் தனிப் பெருஞ் சிறப்புக்களாகும்.

### மானம்புச் சிறப்பு:

குறித்த நவராத்திரி பூசையும், மானம்பு விழாப் பொலி வும் இக்கோயில் வைபவங்களிற் பிரசித்தி பெற்றவை. மானம்பு விழாவன்று திருக்கோயில் விசித்திரமான சோடனை களும் தீபாலங்காரங்களும் பெற்று விளங்கும் காட்சியை வருடாவருடம் பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் கண்டுரு கிக் களிகூர்வர். மானம்புவிற்கென மாவிட்டபுரத்திலிருந்து கோலாகலமாக எழுந்தருளுங் கந்தசுவாமியாரைச் சோடனைப்

பந்தலில் இளைப்பாற்றி அங்கு நிகழ்விக்கும் விசேட அலங்கார பூசைகளின் பரிமளிப்பும் கீதவாத்திய இரசனையும் மிகமிக இரம்மியமானவை.

செல்வத் தாயொருத்திக்கு அருமைப் புதல்வனொருவன்; அவன் காரியார்த்தமாக வேறோரிடத்தில் தங்குபவன்; ஆண்டுக்கொருமுறை மட்டும் அவன் தன் தாயிடம் வந்து போகக்கூடியதாயிருக்கும். இப்படியானால், அந்த மகன் வருகின்ற அன்றைக்கு அந்தத் தாய்வீட்டில் அலையக்கூடிய அன்பு எவ்வளவு! பொலியக்கூடிய ஆரவாரம் எவ்வளவு! பொங்கக்கூடிய மகிழ்ச்சி எவ்வளவு! நடைபெறக்கூடிய உபசாரம் எவ்வளவு! மானம்புத் தினத்தன்று இக் கோயிலில் தரிசிப்போர் ஒவ்வொருவரும் அவ்வளவையும் அனுபவிப்பர். 'தாய் மகன் சந்திப்பின்போது நிகழும் குதூகலக் காட்சியிது' என்ற நினைவு எல்லோர் மனத்திலும் நிழலாடும். இக்காட்சியைக் கண்டின்புற்ற அன்பரொருவர் தம் காட்சியின் பயனைக் கவிதையாக வடித்துவிடுகின்றார்:

மாருதப் பிரவல்லி திசையுக்ர சோழனருள்
மகளுற்ற குன்மவலியும்
மாமுகமு நீக்கியலர் மகளென வனப்பருளி
மாவிட்ட புரமென்றுநற்
பேருலவ விட்டுலகி னிற்கொடிய மிடிகவலை
பிணியொன்று மணுகாமலே
பேறுதரு கோயில்கொண் டாசகல் விழாப்பவனி
பேசுமயில் மீதுவந்து
ஆருமயல் தீரவருள் விளையாடல் செய்துவரு
மறுமுகக் குமரேசனை
ஆர்வமொ டெதிர்ந்துப சரித்திடவு மடியருறு
மாகுல மகற்றிமேலாம்
சீருமுயர் கல்விஞா னம்பே றளிக்கவுந்
திருவுளங் கொண்டெழிலுறும்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே.

இச் செய்யுள் 'தெல்லிநகர் எழுகுடைப்பதித் துர்க்கா தேவி பதிகம்' என்ற நூலில் உள்ளது. இந்நூல் பெயருக் கேற்பப் பதிகத்துக்குரிய பத்துப் பாடல்களுடன் காப்பு, பிழை பொறுத்தல், வாழி என்ற வகைகளிலும் ஒவ்வொரு பாடலைக் கொண்டுள்ளது. இப் பதின்மூன்று பாடல்களும் சங்கானை வாசியாகிய தம்பர் பொன்னையா என்னும் அன்ப ரால் இயற்றப்பெற்றவை. இவர் நல்ல தமிழ்ப்புலமையுள்ள வர்; துர்க்காதேவியுபாசகர் என்பது அப்பாடல்கள்மூலம் புலனாகின்றது. இப்பதிகத்தை ஆக்கியோன் பெயரும், ஆக்கு வித்தோன் பெயரும் நூலினிறுதியில் ஒரு செய்யுளில் அமைத் தியற்றப்பட்டுள்ளன.

## புராணபடனச் சிறப்பு :

இக்கோயிலிற் பிரபல்யமாயிருந்து வந்த மற்றொரு நிகழ்ச்சி புராணபடனமாகும். வருடந்தோறும் பெரியபுராணம், கந்த புராணம் ஆதியன கிரமமாகப் படிக்கப்பெற்றுவந்துள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல அறிஞர்கள் பலரும் இப் படிப்புக்களிற் பங்குபற்றியுள்ளார்கள். உடுப்பிட்டிச் சிவசம் புப் புலவர் அவர்கள் ஒரு தடவை இக்கோயிலிற் பெரிய புராணப்படிப்பிற்கு வந்து அதிலுள்ள "ஐந்து பேரறிவும்......" என்ற ஒரு செய்யுளுக்குச் சரியாக மூன்று மணித்தியால நேரம் சிறந்த விரிவுரை நிகழ்த்தியுள்ளார்கள். பெருந்தொகை யான அறிஞர்கள் அதனை உடனிருந்து கேட்டுப் பாராட்டி யுள்ளார்கள். இச்சம்பவம் நடைபெற்றபோது உடனிருந்த வரும், இக்கோயிலின் முன்னைநாள் அர்ச்சகராயிருந்தவரு மான ஓர் அந்தணப் பெரியார் வாயிலாக நேரிற் கேட்டறி யப்பெற்ற செய்தி இது. இப்போது ஒரு தலைமுறைக்குமுன் இக்கோயில் எந்நிலையி லிருந்துள்ளதென்பதை ஒருவாறு தெரிந்துகொள்ளுதற்கு மேற்குறித்த சம்பவங்கள் உதவு கின்றன. அன்றைய நிலை அப்படி; இனி இன்றைய நிலை?.........

திருப்பணி :

காலகதியிற் கோயிற் கட்டிடங்கள் பழுதடைந்துகொண்டு வந்தன. அதனுல், சென்ற 1953ஆம் ஆண்டில் கோயில் முழுவதையும் புதுப்பிக்கவேண்டியநிலை ஏற்பட்டது. அவ் வருடத்தில், யாழ்ப்பாணத்துப் பிரபலஸ்தர்கள் பத்துப் பேரைக்கொண்ட நிர்வாகசபையொன்று தெரிவுசெய்யப் பெற்றது. இந் நிர்வாகசபையினர் தம்மாலியன்றவரையும் முயன்று நிதி சேர்த்து அவ்வருடமே ஆவணி மாதம் 6ஆந் திகதியன்று திருப்பணியை ஆரம்பித்தனர். அச்சபையினரின் பெருமுயற்சி சைவ உலகின் பாராட்டுக்குரியது. சபையின் உபதலைவரும், தனுதிகாரியும் திருப்பணி முயற்சியில் விசேஷ சிரத்தை காட்டியுள்ளனர். உபதலைவர் திரு. என். சங்கரப் பிள்ளை அவர்கள் தாமே பெரும் பொருளுதவித் திருப்பணி முயற்சிக்கு முன்மாதிரியாயிருந்து வந்தார். தனுதிகாரி திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் தாம் ஒரு எம். பீ. யாக இருந்தும் அதனைப் பெரிதுபடுத்தாது திருப்பணியையே பெரி தென மதித்துத் திருப்பணிக்குப் பொருள் சேர்ப்பதில் நல் லார்வங் காட்டி வந்துள்ளார். இவ்வகையில் இந்த நிர்வாக சபை புரிந்த அரும்பணியாற் கோயிலின் கர்ப்பக்கிருக வேலை யும், அர்த்தமண்டப வேலையும் இனிது நிறைவேறின.

இப் பழைய நிர்வாகசபை அங்கத்தவரிற் சிலர் காலஞ் சென்று விட்டமையாலும், தேவையை நோக்கி அங்கத்தவர் தொகையை அதிகரிக்கவேண்டியிருந்தமையாலும் 1962ஆம் ஆண்டிற் புதிய நிர்வாகசபையொன்று தெரிவுசெய்யப்பெற் றுள்ளது. இப் புதிய சபை யாழ்ப்பாணத்திற் பிரசித்தி வாய்ந் துள்ள முப்பது அங்கத்தவர்களைக் கொண்டதாய் அமைந் துள்ளது. இச் சபையினர் தம் விடாமுயற்சியால் மேலும் மேலும் பொருள் சேர்த்து மகாமண்டபத் திருப்பணியையும் நிறைவேற்றியுள்ளனர். இதனைத் தொடர்ந்து 1965ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து துரித வேலை நடைபெற்று, பிள்ளையார் சந்நிதியும், தரிசன மண்டபமும், கொடிமர மண் டபமும், மடைப் பள்ளியும், நாகதம்பிரான், வைரவர் சந்நிதி களும் நிறைவேற்றப்பட்டு, நிகழும் விசுவாவசு வருடம்

ஆவணி மாதம் 23ஆம் திகதி (8-9-65) புதன்கிழமை சுக்ல பக்ஷ திரயோதசியும் திருவோணநட்சத்திரமும் சித்தயோக முங் கூடிய சிங்கலக்கின சுப முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் கொடிமர மண்ட பம் பூர்த்திசெய்யப்படாததும், கோபுரமில்லாமல் இருப்ப தும், சுற்றுமதில் இல்லாமல் இருப்பதும் சிந்திக்கப்பாலன. அவற்றையும் அன்பர்கள் ஒன்றுசேர்ந்து நிறைவேற்ற அம் பாள் கருணை புரிவாராக.

பெருந் தெருவிலிருந்து கோவிலுக்கு மின்சாரம் எடுக்கப் பட்டிருப்பதும், அவ்வெளிச்சத்தால் கோயில் புத்தொளி பெற்று அழகுடன் விளங்குவதும் மிக மகிழ்ச்சிக்குரிய காரிய மாகும்.

தரிசன மண்டபத்தைச் செப்பனிடும் வேலையில் இவ்வூர் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து சிரமதான இயக்கத்தில் ஈடு பட்டுத் தொண்டு புரிந்தமை பாராட்டிற்குரியது.

இன்னும் சைவஅன்பர்களின் ஆதரவும், இளைஞர்களின் முயற்சியும் மிகமிக வேண்டற்பாலன.

"ஆலயம் மடங்கள் தம்மைக்
கல்லினுற் சமைத்த பேர்கள்
கயிலைவிட் டகலா ரன்றே"

தன்னை வழிபடுவோரைத் தாங்கிப் பெருங்கருணை பொழி வார் துர்க்காதேவி.

**"மிகுதெல்லி உழுகுடைப்
பதியில்வளர் துர்க்கையும்
வீரமொடு வாழி! வாழி."**

வணக்கம்.

விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 6ஆம் திகதி (22-10-65) மண்டலாபிஷேக தினத்தன்று இப்பிரசுரம் வெளியிடப்பட்டது.

❋

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தெல்லிநகர், உழூகுடைப்பதித்
# துர்க்காதேவி பதிகம்

## காப்பு

வெண்பா

சீரார் நற் றெல்லிநகர் சேரே ருழூகுடைவாழ்
பாரார் துர்க் காதேவிப் பண்ணவிக்கு—நேரார்வத்
தாற்பதிக மோதவுயர் தந்திமுகத் தெந்தையிரு
காற்சதவம் போருகப்பூக் காப்பு.

## ஆசிரிய விருத்தம்

உலகமொரு மூன்றினுங் குலவுபற் பலகோடி
யோனிபே தங்களாகி
ஊர்வநீர் வாழ்வதத் துவநடப் பனநிற்ப
வுயரப் பறப்பதவழ்வ
நிலவவரு மக்கள்வகை வகையாக வீன்றுமிக
நீடருள் சுரந்தவைகடம்
நினைவறிந் திருகண்க ளிமையாம விரவுபகல்
நீங்காம லுடனிருந்து
அகிலபோ கங்களை யு மூட்டியன் பொடுவளர்த்
தாதரித் திடுமன்னையே
அடியரனு தினமுமுண் டானந்த முறவைகு
மரியவா னுவமிர்தமே
திலகவா ணுதலணங் கேயெனது துயரெலாந்
தீரவருள் செய்யம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (1)

எந்தநா ளெந்தவகை வந்துபந் தித்ததிங்
கென்னைமல மென்பதறியேன்
ஏதிலாக் கற்பங்க ளெண்ணிலெண் ணிலவாய்
இருட்டல மிருந்ததறியேன்
அந்தநடு வாதியில் லாதமக மாயிநின்
அருளினு லறிவுதோன்றி
அமலமாம் வகையற்ப புல்பூடு மரமாகி
யாமெழு வகைப்பிறப்பாய்
வந்துவந் தேபோவ தறியே னினிச்செயும்
வண்ணமே தென்பதறியேன்
வரமருவு முன்சரண் போற்றவறி யேன்சாண்
வளர்க்கவகை தேடியோடிச்
சிந்தைநொந் தேயயரு மறிவிலேன் குறையெலாந்
தீர்த்தருள்செய் வாயம்மணீ.
தெல்லிநக ருழுகுடைப் பதிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (2)

மலமாயை கன்மவிரு ளிடையன்று விழவந்த
வகையொன்று மறியாப்பெரும்
மதிகெட்ட வென்னையிப் படியின்று வரையுமிவ்
வகையாற்றெரு ளுதமிடியால்
கலனென்று மின்றியுயி ரொடுசெத்த பிணமாகி
நாடொறும் வாழவைத்தாய்
நாடுமுன் னருளுக் கடாதன்னை யேயிது
நானுனது மைந்தனன்பாய்
இலகுமிரு குழையருகு பொருதுசெவ் வரிசிதறி
யிருவயில் கனைப்பழித்த
இணைகயற் கண்ணினு லென்முகம் பார்த்துலக
வின்பெலாந் தந்துயாருஞ்
செலவரிய தாயடியர் செல்கதிய தானபர
சிவபதமு மீந்தருள்செய்வாய்
தெல்லிநக ருழுதுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (3)

அருளோங்கு மானந்த வல்லிநா லெண்வகை
அறங்களை வளர்த்தசெல்வி
அயனுதி முப்பத்து முக்கோடி தேவர்கித
மடிபரவு மிறைவிபோதப்
பொருளோங்கு முயர்தவத் தோரருங் கதியைப்
பொருந்தவழி காட்டுமன்னையே
பொருளிலேன் ருய்தந்தை தமருதவி தானிலேன்
புவியிலொரு சுகமுமில்லேன்
மருளோங்கி நிறைமனத் தேனிகம் பரமான
வாழ்வினுந் தாழ்வுறுவனே
வந்துவந் தேபோன வாழ்வினல் நொந்துளம்
வாடுமென் முகநோக்கியே
தெருளோங்கு முயர்கல்வி செல்வமுந் தந்துதுயர்
தீரவருள் செய்யம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (4)

பெறுமெலாப் பிறவியினு மானுடப் பிறவிதான்
பெறலரிய தென்றுபெருநூல்
பேசுமிப் பிறவியை யெடுத்தும் பெறும்பேறு
பெறவிடாக் கொடுமைசான்ற
வறுமைவந் தென்குலங் கல்விசெல் வங்குணம்
வடிவெலாங் குடிபோக்கவே
மதிவாடி னேன்றருண மீதருள் வை யிந்திரன்
வானோ ரிடும்பைநீங்கக்
கறுவுகொ ளுளத்தொடுறு சமமொழித் தருளிலாக்
கள்ளவசு ரக்கிளையுடன்
கருதுகா சிபமுனிவ னொடுசேர்ந்து மாயைதரு
காதலன் சூரபதுமச்
செறுநனைச் செற்றவறு முகவனைப் பெற்றவுயர்
திருவுற்ற பெருநங்கையே
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (5)

பங்கய மலர்ப்பதத் துணைகளும் பரிபுரம்
பாடகம் பாதசரமும்
பைங்கொடியை நிகரிடையு நிகரில்பட் டுடையுமருள்
பகிரபய வரதகரமும்
துங்கதொடி சூடகமு மாகமுத் தாரமுந்
துயல்ரத்தி னக்குழைகளும்
சோதிவிடு திருவதன முடனேழை யேன்முன்
துலங்கவந் தருள்புரிகுவாய்
திங்களைத் தீண்டுபல வின்கனிகள் கீண்டுமாத்
தீங்கனிகள் சிதறிவாழைச்
செங்கனிக ளைத்துவைத் துக்குரு கினம்வெரீஇச்
சேவல்பெடை யோடுமிரியத்
தெங்கில்முதிர் பழமுதிரு மங்குல்படி சோலையுஞ்
செந்நெல்விளை கழனியுஞ்சூழ்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (6)

அந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
அமரிசங் காரிகௌரி
ஆறட் சரத்தியுர நேமிக் கரத்திவலி
யாரம் பணத்திநிகரில்
சுந்தரி நிறைந்தபர மானந்தி நித்தியச்
சுகசோ பனத்திவாய்ந்த
சூலியெண் டோளியயி ராணிமுத லானவுயர்
சூரரம் பையரிறைவியே
தந்தைநீ தாயுநீ தமருநீ கனமிக்க
சகலபாக் கியமுநீயே
தாரணியி லுனையன்றி வேறுதுணை யிலையெனது
சஞ்சல மெலாநீக்கியே
சிந்தைமகிழ் நீடவரு பந்தமரு ளோடவுறு
தீவினைகள் வாடவருவாய்
தெல்லிநக ருழுதுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (7)

நாரணன் மலரிலுறை யாரணன் புகழிலுயர்
நான்மருப் புளவாரணன்
நவையிலா தித்தர்மல முத்தரா ஞேரெலாம்
நவிலுமா சாரமொருவிப்
பேரணங் கொடுபணித் திடுதொண்டு களையெலாம்
பிழையிலா தேயியற்றிப்
பீடழிந் தவசமுற நாடொறும் வினைகொண்டு
பெருமிதத் தோடுகருணைக்
காரண மடாதுற்ற மகிடா சுரன்மிகக்
கறுவியெதிர் பொருதஞ்சியே
கரவிலொரு வன்னிமர மாகவெட் டித்துண்டு
கண்டண்டர் வாழவைத்த
சீரணங் கேயுனது புகழெனது நாவினுற்
செப்பவெளி தோவம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (8)

மாருதப் பிரவல்லி திசையுக்கிர சோழனருள்
மகளுற்ற குன்மவலியும்
மாமுகமு நீக்கியலர் மகளென வனப்பருளி
மாவிட்ட புரமென்றுநற்
பேருலவ விட்டுலகி னிற்கொடிய பிடிகவலை
பிணியொன்று மணுகாமலே
பேறுதரு கோயில்கொண் டாசகல் விழாப்பவனி
பேசுமயில் மீதுவந்து
ஆருமயல் தீரவருள் விளையாடல் * செய்துவரு
மறுமுகக் குமரேசனை
ஆர்வமொ டெதிர்ந்துப சரித்திடவு மடியருறு
மாகுல மகற்றிமேலாஞ்
சீருமுயர் கல்வி ஞானம்பே றளிக்கவுந்
திருவுளங் கொண்டெழிலுறுந்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (9)

பந்தபா சத்தினுற் பந்தித்து மதிகெட்ட
பாவியான் செய்தபிழைகள்
பலகோடி யெனினுமவை யாவும் பொறுப்பதுன்
பாரமெனை யீன்றதாயே
எந்தனுடல் பொருளாவி மூன்றுமுன் றனதாக
வீந்தே னெனக்கிங்கினி
ஏதொன்று மில்லையெல் லாமுன்ன தேதகா
தென்னைக்கை விடல்சென்னிதான்
வந்திக்க விழிகடரி சிக்கக் கரங்குவிய
வரவலந் தாள்கள்வாழ்த்த
வாய்செவிகள் கேட்பவரி தாயபுக ழோடுதிரு
வடிவையனு தினமுமனமே
சிந்திக்க வும்வரந் தந்தருள் வேணுமென்
சென்மசா பலியமாகத்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (10)

*மானம்பு

# பிழை பொறுத்தல்

கட்டளைக் கலித்துறை

சொல்லார் விருத்தத் தொகையா லியற்றிய தொல்பதிகத்
தெல்லாப் பிழையும் பொறுத்தே யிரங்கி யினிதருள்வாய்
மல்லார் வளமிகு பண்ணைகள் சூழும் வயங்குதெல்லித்
தொல்லார் நகரி லுழுகுடை வாழ்செய்துர்க் கைத்திருவே.

# வாழி

## ஆசிரிய விருத்தம்

இசைமருவு வேதமுட னாகம புராணங்கள்
என்றுநில வுற்றுவாழி
ஏமமுறு பெரியோர்கள் செய்கின்ற தவவேள்வி
இனிதாக முற்றிவாழி
அசைவின்றி யந்தணர்கள் வானவர் பசுக்களிவை
அபரிமித முற்றுவாழி
அறங்களெண் ணான்குமிக யாவரும் போற்றியே
அன்பொடுஞ் செய்துவாழி
திசையெங்கு முறமுறைமை செங்கோல் செலுத்தியே
திறல்படைத் தரசன்வாழி
திகழ்மதியின் மும்மாரி பெய்துபழ னத்துவளர்
செழும்பயிர் தழைக்கவாழி
மிசைகொண்ட நீறினுட னக்கவட மணிசைவ
வேடவடி யார்கள்வாழி
மிகுதெல்லி யுழுகுடைப் பதியில்வாழ் துர்க்கையும்
வீரமொடு வாழிவாழி.

## ஆக்கியோன்

தெல்லிநகர் சேர்வுறு வத்தை மேவுஞ்
    சின்னப்பு வின்சுதன்கந் தையா வென்னும்
நல்லறிஞன் குகனடிமை பூண்ட தோன்றல்
    நவிலுமுழு குடையின்மே விடுந்துர்க் கைக்கா
யொல்லுபதி கம்பாடித் தருக வென்ன
    வோதினன்சங் கானைதனி லுதித்தோ ஞன
பல்குபுகழ்த் தம்பர்சுதன் பொன்னை யாவாம்
    பாவாணர் மெச்சுபுக ழோசன் ருனே.

திருச்சிற்றம்பலம்

குகன் அச்சகம், தெல்லிப்பழை

குகன் அச்சகம், தெல்லிப்பழை